பிரஸார்பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை-4

03 02 2023**FRIDAY** 6 45 **AM**

வணக்கம். ஆல் இண்டியாரேடியோ, சென்னை- மாநிலச் செய்திகள்

*தலைப்புச் செய்திகள்*

1. ஊரகப் பகுதிகளில் தொடக்கவேளாண் கூட்டுறவு சங்கங்களின் பணிகள் முக்கியத்துவம் வாய்ந்ததுஎன்றுமத்தியகூட்டுறவுத் துறைஅமைச்சர் திருஅமித் ஷா கூறியுள்ளார்.

2. மாநிலங்களுக்குவழங்கப்படும் 50 ஆண்டுகாலவட்டியில்லாகடன் மேலும் ஓராண்டுக்குநீட்டிக்கப்பட்டுள்ளதாகமத்தியநிதியமைச்சர் திருமதி. நிர்மலாசீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. எரிசக்திதொடர்பானசர்வதேசகட்டமைப்புகளைவலுப்படுத்துவதில் இந்தியாமுக்கியப் பங்குவகிக்கும் என்றுஅத்துறைக்கானஅமைச்சர் திரு. ஆர்.கே. சிங் கூறியுள்ளார்.

4. இலங்கைஅருகேகரையைகடந்தகாற்றழுத்ததாழ்வு மண்டலம், குமரிக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ளதன் காரணமாக, தென்மாவட்டங்களில் இன்றுமழைபெய்யவாய்ப்புள்ளதாகவானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. தாய்லாந்துமாஸ்டர்ஸ் பேட்மின்டன் போட்டியின், காலிறதிஆட்டத்தில் இந்தியாவின் சாய் ப்ரணீத் இன்றுசீனாவின் **Li Shi Feng**-வை எதிர்கொள்கிறார்.

>>>><<<<

பொதுசேவைமையங்களில் வழங்கப்படும் சேவைகளைதொடக்கவேளாண் கடன் சங்கங்கள் வழங்குவதற்குவகைசெய்யும் ஒப்பந்தம் நேற்று புதுதில்லியில் கையெழுத்தானது.

இந்தஒப்பந்தத்தில் கூட்டுறவுத்துறையும், தகவல் தொழில்நுட்பத்துறையும் கையெழுத்திட்டதாகமத்தியஅரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கூட்டுறவு அமைப்புகளைவலுப்படுத்துவதற்கும், விவசாயிகள் பல்வேறுசேவைகளைஎளிதாகபெறுவதற்கும் இந்தஒப்பந்தம் உதவிடும் என்றுமத்தியகூட்டுறவுத்துறைஅமைச்சர் திருஅமித் ஷா கூறியுள்ளார்.

ஊரகப்பகுதிகளில் தொடக்கவேளாண் கூட்டுறவு சங்கங்களின் பணிகள் இன்றியமையாததாகஉள்ளதுஎன்றும் அவர் கூறினார்.

தற்போது இந்தஒப்பந்தத்தின் மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திருஅமித் ஷா தெரிவித்தார்.

>>>><<<<

மாநிலங்களுக்குவழங்கப்படும் 50 ஆண்டுகாலவட்டியில்லாகடன் மேலும் ஓராண்டுக்குநீட்டிக்கப்படும் என்றுமத்தியநிதியமைச்சர் திருமதி. நிர்மலாசீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்தியதொழில் கூட்டமைப்பு ஏற்பாடுசெய்திருந்தநிகழ்ச்சியில் கலந்துகொண்டுபேசியஅவர், உள்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் நலத் திட்டங்களைதொடர்ந்துமாநிலஅரசுகள் மேற்கொள்ளும் வகையில், மத்தியஅரசு இந்தமுடிவைமேற்கொண்டுள்ளதாககூறினார்.

இதற்கென 1 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடுசெய்துள்ளதாகஅவர் தெரிவித்தார்.

இதில் 80 சதவீதநிதி, மாநிலங்களின் முதலீட்டுத் தேவைகளுக்குபயன்படுத்தப்படவேண்டும் என்றும் எஞ்சியுள்ள 20 சதவீதநிதியைஒரேநாடு—ஒரேரேஷன் அட்டைதிட்டம் போன்றநலத்திட்டங்களுக்குபயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

எரிசக்திதொடர்பானசர்வதேசகட்டமைப்புகளைவலுப்படுத்துவதிலும், உலகஅளவில் மிகப் பெரியபொருளாதாரபிரச்சினைகளுக்குதீர்வு காண்பதிலும் இந்தியாமுக்கியப் பங்குவகிக்கும் என்றுமத்தியமின்துறைஅமைச்சர் திரு. ஆர்.கே. சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்தியதலைமையில் ஜி-20 அமைப்பின் எரிசக்திமாற்றம் தொடர்பானபணிக்குழுவின் கூட்டம் பெங்களூருவில் வரும் 5ஆம் தேதிமுதல் 7ஆம் தேதிவரைநடைபெறவுள்ளதாககூறினார்.

இதில் 19 நாடுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்டபிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

ஐரோப்பிய யூனியன் மற்றும் 9 விருந்தினர் நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தகூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாகஅமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

விண்வெளிச் சுற்றுலாவைஊக்குவிக்கும் வகையில், உள்நாட்டுவிண்வெளித் திறனைமேம்படுத்துவதுகுறித்துஅரசுபரிசீலித்துவருவதாகமத்தியவிண்வெளித்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விஒன்றுக்குஎழுத்து மூலம் அவர் அளித்துள்ளபதிலில், விண்வெளிசுற்றுலாவிற்கானசாத்தியக்கூறுகள் குறித்துஆய்வு நடத்தப்பட்டுவருவதாகதெரிவித்துள்ளார்.

மனிதனைவிண்வெளிக்குஅனுப்பும் ககன்யான் திட்டம் உள்ளிட்டபல்வேறுதொழில்நுட்பமேம்பாட்டுநடவடிக்கைகளில், இஸ்ரோஈடுபட்டுள்ளதாகஅமைச்சர் கூறியுள்ளார்

>>>><<<<

அஸ்ஸாம் மாநிலம் பார்பேட்டாவில் இன்றுநடைபெறும் உலகஅமைதிக்கானகிருஷ்ணகுருஏக்நாம் அகண்டகீர்த்தனைநிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திரமோடிகாணொலிவாயிலாக பங்கேற்றுஉரையாற்றுகிறார்.

ஒருமாதகாலம் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில், உலகம் முழுவதிலுமிருந்துஒன்றரைகோடிபக்தர்கள் பங்கேற்கவுள்ளதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

கல்வி, சுகாதாரம் மற்றும் ஆன்மீகம் உள்ளிட்டதுறைகளில் இந்தசேவாஸ்ரம் சேவையாற்றிவருவதாகஅவர் மேலும் தெரிவிக்கிறார். >>>><<<<

மத்தியஅரசின் மின்னணுசந்தைவாயிலாகநடப்பு நிதியாண்டில் ஒன்றரைலட்சம் கோடி ரூபாய் அளவிற்குவர்த்தகம் நடைபெற்றுள்ளதாகமத்தியதொழில்துறைஅமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகஅந்தஅமைச்சகம் வெளியிட்டுள்ளஅறிக்கையில், நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் அதன் வர்த்தக இலக்கான 1 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாயைதாண்டும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்தமின்னணுசந்தையில், 66 ஆயிரத்திற்கும் அதிகமானநிறுவனங்களும், 58 லட்சத்திற்கும் அதிகமானவிற்பனைமற்றும் சேவைத் துறையினரும் பதிவு செய்துள்ளனர்.

இதில், 29 லட்சம் பொருட்களும், 270 வகையானசேவைகளும் இதில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இதன் மூலம் அரசுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு கிடைக்கும் என்றுஅந்தஅறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>><<<<

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைசார்பில், ஒப்பந்தசெவிலியர்களுக்குநிரந்தரபணிஆணைகள் மற்றும் இளநிலைஉதவியாளர் பணியிடத்திற்குகருணைஅடிப்படையிலானபணிஆணைகளைமுதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்றுவழங்குகிறார்.

சென்னைதலைமைச்செயலகத்தில் இதற்கானநிகழ்ச்சி இன்றுகாலைநடைபெறுகிறது.

>>>><<<<

பேரறிஞர் அண்ணாவின் 54வது நினைவுதினம் இன்றுஅனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, சென்னைமெரினாகடற்கரையில் உள்ளஅன்னாரதுநினைவிடத்தில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மலர் வளையம் வைத்துமரியாதைசெலுத்துகிறார்.

>>>><<<<

இலங்கைஅருகேகரையைகடந்தகாற்றழுத்ததாழ்வு மண்டலம், குமரிக்கடல் மற்றும் அதனையொட்டியுள்ளபகுதிகளில் நிலவிவருவதாகசென்னைவானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தென்தமிழகமாவட்டங்களானதிருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டிணம், புதுக்கோட்டைமற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானதுமுதல் மிதமானமழைபெய்யவாய்ப்புள்ளதாகஅந்தமையம் தெரிவித்துள்ளது.

மழைகாரணமாக, திருவாரூர் மாவட்டத்திற்குபள்ளிகளுக்குமட்டும் இன்றுவிடுமுறைஅளிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனைசுற்றியுள்ளபகுதிகளில் பலத்தகாற்றுவீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்குசெல்லவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

சர்வதேசசூரியசக்திகூட்டணியில் காங்கோசையெழுத்திட்டுள்ளதை இந்தியாவரவேற்றுள்ளது.

>>>><<<<

**Zambia**-விலிருந்து இந்தியாவந்துள்ளஅந்நாட்டுநாடாளுமன்றபிரதிநிதிகள் குழுவினர் நேற்றுகுடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதிமுர்முவைசந்தித்துபேசினர்.

>>>><<<<

ராஜ்ஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் ஜி-20 தொடர்பானவேலைவாய்ப்பு பணிக்குழுக் கூட்டம் நேற்றுதொடங்கியது.

>>>><<<<

தருமபுரியில், பாக்டீரியாவால் கன்றுவீச்சுநோயிலிருந்துபாதுகாக்ககால்நடைகளுக்குதடுப்பூச்சிசெலுத்தவேண்டும் என்றுஅம்மாவட்டஆட்சியர் திருமதி. சாந்திகேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>><<<<**

கள்ளக்குறிச்சிமாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கானஅடையாளஅட்டைவழங்கும் முகாம் நேற்றுநடைபெற்றது.

**>>>><<<<**

தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் கடல்பசு, டால்பின் மீன்களைகடலில் விட்டமீனவர்களுக்குவனத்துறைசார்பில் ஊக்கத்தொகைவழங்கப்பட்டது.

**>>>><<<<**

பெருநகரசென்னைமாநகராட்சிக்குசெலுத்தவேண்டியநிலுவையில் உள்ளநடப்பு நிதியாண்டுக்கானசொத்துவரியைஉடனடியாகசெலுத்தவேண்டும் என்றுமாநகராட்சிகேட்டுக் கொண்டுள்ளது.

**>>>><<<<**

கிருஷ்ணகிரிமாவட்டத்தில் 20 ஆயிரம் கிடேரிகன்றுகளுக்கு இன்றுமுதல் 25 நாட்களுக்குதடுப்பூசிசெலுத்தும் பணிகள்நடைபெறவுள்ளதாகஅம்மாவட்டஆட்சியர் திரு. ஜெயச்சந்திரபானுரெட்டிதெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

தைப்பூச திருவிழாவையொட்டி தஞ்சைமாவட்டம், திருவிடைமருதூர் அருள்மிகுமகாலிங்க ஸ்வாமிகோவிலில் இன்றுதேரோட்டம் நடைபெறவுள்ளது.

**>>>><<<<**

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்துமாஸ்டர்ஸ் பேட்மின்டன் போட்டியின், ஆடவர் காலிறுதிஆட்டத்தில் இந்தியாவின் சாய் ப்ரணீத் இன்றுசீனாவின் **Li Shi Feng**-ஐ எதிர்கொள்கிறார்.

**>>>><<<<**

ஈரான் சர்வதேசபேட்மின்டன் போட்டியின், காலிறுதிக்குமுந்தையசுற்றுஆட்டத்தில், இந்தியாவின் **Tasmin Mir**. இந்தோனேஷியாவின் **MutiaraAyuPuspitaravi**-யைஎதிர்கொள்கிறார்.

மற்றொருபோட்டியில், இந்தியாவின் **Sreshta Reddy** - இந்தோனேஷியாவின் **Susando**-வை எதிர்கொள்கிறார்.

>>>><<<<

முத்தரப்பு மகளிர் டுவென்டி—டுவென்டிகிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் தென்னாப்பிரிக்காஐந்துவிக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுகோப்பையைகைப்பற்றியது.

ஈஸ்ட் லண்டனில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்றுமுதலில் பேட் செய்த இந்தியாநிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 4 விக்கெட் இழப்பிற்கு 109 ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்ததென்னாப்பிரிக்காஐந்துவிக்கெட் இழப்பிற்கு 113 ரன் எடுத்துவெற்றிபெற்றது.

>>>><<<<

டாக்காவில் இன்றுநடைபெறவுள்ள 20 வயதுக்குட்பட்டோருக்கானதெற்காசியமகளிர் கால்பந்துசாம்பியன் போட்டியில், இந்தியா பூட்டானைஎதிர்கொள்கிறது.

>>>><<<<

ஐஎஸ்எல் கால்பந்துபோட்டியில், நேற்றுநடைபெற்றசென்னை—ஒடிசாஅணிகளுக்கு இடையிலானஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

இருஅணிகளும் தலா 2 கோல் போட்டன.

இன்றுநடைபெறவுள்ளபோட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி—கேரளஅணியைஎதிர்கொள்கிறது.

>>>><<<<

தஞ்சாவூர் பெரியார் மணியம்மைபல்கலைக் கழகவளாகத்தில் அகில இந்தியஅளவில் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்கும் 11வது பாராவாலிபால் போட்டி இன்றுதொடங்குகிறது.

மூன்றுநாட்களுக்குநடைபெறும் இப்போட்டியில், 20க்கும் மேற்பட்டமாநிலங்களிலிருந்து 36 அணிகளைச் சேர்ந்த 450 வீரர் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இதில் வெற்றிபெறும் அணி, சர்வதேசஅளவில் நடைபெறும் பாராவாலிபால் போட்டியில் பங்கேற்கும்.

>>>><<<<